செ.வெ.எண் :648 நாள்: 04.10.2021

# தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் ரூ.4,06,200/- மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (04.10.2021) நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று பேசியதாவது:-

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒவ்வொரு திங்கள் கிழமை தோறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுக்க மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெறாமல் மனு பெட்டிகள் மூலம் மனுக்கள் பெறப்பட்டு தொடர்புடைய துறைகள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தன. தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க இன்று முதல் ஒவ்வொரு திங்கட்கிழமை தோறும் கொரோனா நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி மக்கள் குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறவுள்ளது.

அதன் அடிப்படையில் இன்றைய தினம் நமது மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, குடும்ப அட்டை, பட்டா மாற்றம், கல்வி கடன் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 410 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்களை விசாரணை செய்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், மனுக்கள் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கை குறித்த விவரத்தை உடனடியாக மனுதாரருக்கு தெரிவிக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

மேலும், இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் தன்விருப்ப நிதியிலிருந்து வண்டிக்காரத் தெருவைச் சேர்ந்த செல்வி. சண்முகப்பிரியா அவர்களுக்கு கல்லூரியிலிருந்து சான்றிதழ் பெற ரூ.20,000/-க்கான காசோலையினை வழங்கியும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் தலா ரூ. 7650/- வீதம் ரூ. 22,950/- மதிப்பீட்டிலான மூன்று சக்கர சைக்கிள் 3 நபர்களுக்கு வழங்கியும், சவுதி

அரேபியா நாட்டில் பணியில் இருந்தபோது இறந்த, கும்பகோணம் வட்டம், மேலக்காவேரி கிராமம், வடக்கு குடியானத் தெருவை சேர்ந்த (லேட்) அப்துல் ரஹ்மான் என்பவருக்கு சேரவேண்டிய சட்டப்படியான நிலுவைத் தொகை ரூ.3,63,250/-க்கான காசோலை, அவரது தாயார் திருமதி. அலிமாபீவி க/பெ. (லேட்) முகமது சுல்தான் என்பவருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் கூடுதல் ஆட்சியர் வருவாய் (மரு) என்.ஓ.சுகபுத்ரா இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு. ஸ்ரீகாந்த் இ.ஆ.ப., பயிற்சி ஆட்சியர் திரு. கௌஷிக் இ.ஆ.ப., சமூக பாதுகாப்பு திட்டம் தனித்துணை ஆட்சியர் திரு. சாலை தவவளவன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு) திருமதி. விஜயலட்சுமி மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு. சாமிநாதன் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**